திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை பால்வள நிறுவனம் மூலமாக பால் விநியோகம் செய்யப் படுகிறது. இப்படி வழங்கப்படுகின்ற பாலானது, கூட்டுறவு சங் கங்களிலிருந்து 8·9 அல்லது 9 சதமானம் கொழுப்பு சத்து இருந்தால் இரண்டு ரூபாய்க்கு குறைவாக அதாவது ஒன்றரை ரூபாய்க்கு வாங்கப்பட்டு, பின்னால் கொழுப்பு சத்தை எடுத் விட்டு 4·5 சத விகிதம் ஆக ஆக்கி அதை 2 ரூபாய் மார்ஜின் வைத்து அதிகமான விலைக்கு விற்கிறார்கள். இந்த மார்ஜின் அதிகமாக இருப்பதால் பால் உற்பத்தி செய்கின்றவர்களுக்கு கூடுதலான விலை கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலை வர் அவர்களே, பாலில் கொழுப்புச் சத்து 8 சத வீதம் இருப்பது மிகவும் கஷ்டம், எருமைப்பாலில் வேண்டுமானால் இருக்கலாம். 8 சத விகிதம் கொழுப்புச் சத்து இருந்தால் 2 ரூபாய் 10 பைசா உற்பத்தியாளருக்கு நிச்சயமாக கிடைக்கும். 8சதவீதமாக இருந்த தால் அதற்கு 2 ரூபாய்க்கு குறைவாக எந்த சங்கமும் கொள்முதல் செய்யவில்லை. அப்படி ஏதாவது சங்கங்கள் கொள்முதல் செய் வதாக இருந்தால், இதை என்னுடைய கவனத்திற்கு கொண்டு வந்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும், விற்பனையைப் பொறுத்தவரையில் கொழுப்புச் சத்தை எடுத்துவிட்டு நிலைப் படுத்திய பாலாகத்தான் அனுப்ப படுகிறது. அதில் ஏற்படுகின்ற போக்குவரத்து செலவையெல்லாம் கணக்கிட்டுத்தான் விற்பனை விலை நிர்ணயிக்க படுகிறது. அதல்லாமல் அதிகமாக லாபம் சம்பாதிக்கவேண்டும் என்ற அடிப்படையில் அல்ல என்பதை தெரி வித்துக்கொள்கிறேன்.

சென்னை பொது மருத்துவமனையில் இருதயவால்வுகள் பொருத்தும் பிரிவு.

*வினா எண். 38—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்பு மிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1975 முதல் 1977 மார்ச் வரையில் சென்னை பொது மருத்துவமனையில் எத்தனை இருதய வால்வுகள் வாங்கப் பட்டன ?

(ஆ) அவற்றுள், நோயாளிகளுக்குப் பொருத்தப்பட்டவை எத்தனை ?

(இ) இருதய வால்வுகள் ஏதேனும் களவு போயினவா ?

1979 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ)	அயோர்டிக் இருதய வால்வுகள்	28
	மிட்ரல் இருதய வால்வுகள்	24
	மொத்தம்..	52
(ஆ)	அயோர்டிக் இருதய வால்வுகள்	5
	மிட்ரல் இருதய வால்வுகள்	4
	மொத்தம்..	9

(இ) ஆம். அயோர்டிக் இருதய வால்வுகள் 5, மிட்ரல் இருதய வால்வுகள் 5, ஆக மொத்தம் 10 வால்வுகள் களவு போயின. திருட்டுப் போன வால்வுகள் கண்டுபிடிக்கப்பட்டு மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் மூலம் திரும்ப கிடைக்கப் பெற்றன. இம்மாதிரியான திருட்டுக்களை தடுப்பதற்கு இந்த இருதய வால்வுகள் பண்டகக் கிடங்கிலும் அறுவை அரங்கத்திலும் காட்ரிஜ் இரும்புப் பெட்டியில் பாதுகாப்பாக வைக்கப்படுகிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இந்த வால்வுகளின் வால்யூ என்ன? ஒரு வால்வின் விலை என்ன? இந்த வால்வுகள் திருட்டுபோவதற்கு முன்பாக, இதுபற்றி புகார் வருவதற்கு முன்பு, திருட்டுப்போன வால்வுகள் மீண்டும் மருத்துவ மனைக்கு வந்து அங்கேயே சப்ளை செய்யப்படுகிறது, குறைந்த விலையில், திருட்டுப்போன வால்வுகள் திரும்ப எப்படி அங்கே வருகிறது? இதை தடுப்பதற்கு அரசாங்கத்தினிடத்தில் எதாவது திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தற்போது இந்த வால்வுகள் அதிகமாக தயாரிக்கப்படுவது அமெரிக்காவில் தான். அங்கேயிருந்துதான் இவைகளை தருவிக்கிறார்கள். பம்பாய், டெல்லி போன்ற இடங்களிலிருந்து நாம் பெற்று நோயாளிகளுக்கு பொருத்திவருகிறோம். இதனுடைய விலை அதிகமாக இருந்தாலும், ஏழைமக்களுக்கு பொருத்தவேண்டும் என்கின்ற உணர்வின் காரணமாக இது பொருத்தப்பட்டு வரு கிறது. வால்வு திருட்டு கண்டுபிடிக்கப்பட்டு, யார் இதற்கு காரணமாக இருந்தார்களோ அவர்கள் மீது நடவடிக்கை எடுக் கப்பட்டது. குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்ற அடிப்படை யில் குற்றங்கள் சாட்டப்பட்டவர் மெட்ரோ பாலிட்டன் கோர்ட்டால் விடுவிக்கப்பட்டார். அதற்கிடையில் கண்டுபிடிக் கப்பட்ட வால்வுகள் திரும்பத் தரப்பட்டன. மேலும் இப்படிப் பட்ட திருட்டுகள் நடைபெறாமல் இருக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது, தற்போது வால்வுகள் மிகவும் பாது காப்பாக வைக்கப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 9-50.]

திரு. ஆர். மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இருதய வால்வுகள் மொத்தம் எவ்வளவு மாதிரிகள் இருக்கின்றன ? அதிலே அதிகமாக பழுதுபடக்கூடியது எது ? இந்த இருதய நோய் வருவதற்கான காரணங்கள் என்ன என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, இருதயத்தின் இடது மேல் அறைக்கும் இடது கீழ் அறைக்கும் நடுவில் மைட்டிரல் (Mitral) வால்வு என்ற ஈரிதழ் (இரண்டு இதழ் கொண்ட) வால்வு உள்ளது. இது இரத்தத்தை மேலிருந்து கீழே அனுப்பும். கீழிருந்து மேலே அனுப்பாது. இவ்வித வேலையில் தவறு நிகழ்ந்து அதிகமாக இரத்தம் கீழிருந்து மேலே சென்றால் அந்த வால்வை (Repair) பழுதுபார்த்தல் வேண்டும். அது முடியாவிட்டால் செயற்கை வால்வு பொருத்த வேண்டும்.

(2) இருதய இடதுகீழ் அறையில் இருந்து மகா தமணிக்கு (Aorta) இரத்தம் பாயும். இங்கு (aortic) என்ற மூவிதழ் வால்வு உள்ளது. இது இரத்தத்தை மகாதமணியிலிருந்து இருதயத்திற்கு வராமல் தடுக்கும். இந்த வேலையில் பழுது ஏற்பட்டால் இவ்விடத்தில் செயற்கை இருதய வால்வு பொருத்த வேண்டும்.

(3) இருதயத்தில் இன்னும் இரண்டு வால்வுகள் உள்ளன. நுரையீரல், தமணி, மூவிதழ் வால்வு, வலது அறை, மூவிதழ் வால்வு (Tricus Pid valve) இவைகளுக்கு செயற்கை வால்வு பொருத்தவேண்டிய நிலைமை ஏற்படுவது மிகவும் அரிது.

(4) தமிழ்நாட்டில் மிகவும் அதிகமாக ஏழை நோயாளிகள் ரூமாடிக் (Rheumatic) இருதய நோயால் பாதிக்கப்படுகிறார்கள். இவர்களில் சிலருக்கு புதிய செயற்கை இருதய வால்வுகள் தேவைப்படும். அப்படி தேவைப்படும்போது, அவ்வப்போது பொருத்தப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், அமெரிக்காவிலிருந்து வரக் கூடிய இந்த வால்வு அதிகப்படியான விலை என்றுதான் அமைச்சர் அவர்கள் கூறினார்களே ஒழிய என்ன விலை ஆகின்றது அங்கிருந்து வரக்கூடிய போக்குவரத்துச் செலவு உள்பட, அதன் மொத்த மதிப்பு எவ்வளவு என்பதைச் சொல்லவில்லை. அதைச் சொல்ல முடியுமா ? அடுத்து, திருட்டு போனது அங்கே உள்ள டாக்டர்கள் மூலமாகவா அல்லது அங்கே பணிபுரிகின்ற சிப்பந்திகள் மூலமாகவா ? கிடைத்தது, ஆனால் நிரூபிக்க முடியவில்லை என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை. ஆகவே, இதைக் கண்டுபிடித்து, நடவடிக்கை..

1979 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : திருடு கண்டுபிடிக்கப்பட்டது, ஆனால் நிரூபிக்கப்படவில்லை என்று சொல்வது அவ்வளவு சரியா ? ஆகவே, யார் அதைத் திருடினார்கள் என்பதைக் கண்டுபிடித்து, அவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு மீண்டும் அரசு முயற்சி செய்யுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, களவு போனதாக சொல்லப்பட்ட 10 வால்வுகளின் மொத்த விலை ரூ. 28,500 திருடியவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படுகின்ற முறையில்தான், மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆரம்ப சுகாதார நிலையங்கள்.

*வினா எண் 39—திரு. ம. கண்ணன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரும் நிதி ஆண்டில் தமிழ்நாட்டில் எத்தனை ஆரம்ப சுகாதார நிலையங்கள் புதிதாக திறக்க அரசு உத்தேசித்துள்ளது ?

(ஆ) அவை மாவட்ட வாரியாக பிரித்து பகிர்ந்தளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) தமிழ் நாட்டிலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களிலும் ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒன்று என்ற விகிதத்தில் 374 ஆரம்ப சுகாதர நிலையங்கள் ஏற்கனவே செயல்பட்டு வருகின்றன. மேலும் 9 ஊராட்சி ஒன்றியங்களில் கூடுதலாக ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற முறையில் 9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஆக மொத்தம் தமிழ்நாட்டில் தற்போது 383 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, வரும் நிதியாண்டில் கூடுதலாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறக்க உத்தேசமில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே வாசுதேவநல்லூரில் இருக்கக்கூடிய அந்த பிரைமரி ஹெல்த் சென்டர் கட்டிடம் முழுமையாக உடைந்து, பயனற்ற முறை